பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 670 **நாள்: 12.11.2026**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 01.01.2027ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல், சிறப்பு சுருக்கத் திருத்தம்-2027ற்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (12.11.2026) வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 01.01.2027ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல், சிறப்பு சுருக்கத் திருத்தம் (Special Summary Revision)-2027ற்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (12.11.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் வெளியிட்டார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா. பூஷ்ணாதேவி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் விவரங்கள்

மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை (12.11.2026) அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி	29,14,908
ஆண் வாக்காளர்கள்	14,04,968
பெண் வாக்காளர்கள்	15,09,040
மூன்றாம் பாலினத்தவர்	900
மொத்த வாக்குச்சாவடிகள்	4,071
மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை	12,805 (ஆண் – 6,859, பெண் – 5,940, மூன்றாம் பாலினத்தவர் – 6)
இளம் (18-19) வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை	46,200 (ஆண் – 23,395, பெண் – 22,604, மூன்றாம் பாலினத்தவர் – 1)
85 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை	28,159 (ஆண் – 14,334, பெண் – 13,822, மூன்றாம் பாலினத்தவர் – 3)
இராணுவ வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை	531 (ஆண் – 449, பெண்-82)

சென்னை மாவட்டத்தில் மொத்தம் 4,071 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு அதனடிப்படையில் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் குறைந்தபட்சமாக துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,20,852 வாக்காளர்களும், அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 2,28,139 வாக்காளர்களும் உள்ளனர். மேலும் குறைந்தபட்சமாக துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 192 வாக்குச்சாவடிகளும், அதிகபட்சமாக வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 314 வாக்குச்சாவடிகளும் உள்ளது.

06.04.2026 முதல் 31.10.2026 வரை தொடர் திருத்தக் காலத்தில் 15,762 ஆண் வாக்காளர்கள், 19,197 பெண் வாக்காளர்கள் மற்றும் 40 இதர வாக்காளர்கள் என மொத்தம் 34,999 வாக்காளர்களின் பெயர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், 6,510 ஆண் வாக்காளர்கள், 7,078 பெண் வாக்காளர்கள் மற்றும் 8 இதர வாக்காளர்கள் என மொத்தம் 13596 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல், வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களிலும், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களிலும், அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும். மேலும், www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் அடிப்படையில் 01.01.2027-யை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய 11.12.2026 வரை விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக சென்னை தேர்தல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் சிறப்பு முகாம்கள் எதிர்வரும் **21.11.2026 (சனிக்கிழமை), 22.11.2026 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 29.11.2026 (ஞாயிற்றுக்கிழமை)** ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்தப்பட உள்ளது.

எனவே, இதுவரை வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத தகுதியுடைய வாக்காளர்கள், 01.01.2027 அன்று அல்லது அதற்கு முன்பு 18 வயது நிறைவடைவோர், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 04.01.2027 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்காளர்களின் விவரங்கள்

வ. எண்	சட்டமன்றத் தொகுதி எண் (ம) பெயர்	வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை சிறப்பு சுருக்கத் திருத்த முறை (2027)		தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வரைவுப் பட்டியல் (06.04.2026)				சிறப்பு சுருக்கத் திருத்தம்-2027 வரைவுப் பட்டியல் (12.11.2026)			
		01.10.2026-க்கு முன்பு	12.11.2026-க்கு பின்பு	ஆண் வாக்காளர்கள்	பெண் வாக்காளர்கள்	மூன்றாம் பாலின வாக்காளர்கள்	மொத்த வாக்காளர்கள்	ஆண் வாக்காளர்கள்	பெண் வாக்காளர்கள்	மூன்றாம் பாலின வாக்காளர்கள்	மொத்த வாக்காளர்கள்
1.	எண்.11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்	246	247	95,250	1,04,013	96	1,99,359	95,541	1,04,371	100	2,00,012
2.	எண்.12. பெரம்பூர்	298	298	1,09,688	1,16,535	73	2,26,296	1,10,483	1,17,577	79	2,28,139
3.	எண்.13. கொளத்தூர்	286	286	1,01,791	1,09,945	36	2,11,772	1,02,580	1,10,923	36	2,13,539
4.	எண்.14. வில்லிவாக்கம்	255	255	78,671	84,668	33	1,63,372	79,161	85,333	33	1,64,527
5.	எண்.15. திரு.வி.க. நகர் (தனி)	223	223	87,082	94,476	63	1,81,621	87,689	95,351	69	1,83,109
6.	எண்.16. எழும்பூர் (தனி)	200	200	67,542	71,176	57	1,38,775	67,938	71,733	61	1,39,732
7.	எண்.17.இராயபுரம்	194	194	77,211	82,385	58	1,59,654	77,438	82,748	60	1,60,246
8.	எண்.18. துறைமுகம்	192	192	59,771	60,298	57	1,20,126	60,043	60,747	62	1,20,852
9.	எண்.19 சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி	235	230	80,438	85,526	59	1,66,023	80,875	86,189	60	1,67,124
10.	எண்.20. ஆயிரம் விளக்கு	247	245	75,239	82,221	69	1,57,529	75,840	82,978	72	1,58,890
11.	எண்.21. அண்ணா நகர்	273	273	90,834	97,979	48	1,88,861	91,476	98,747	46	1,90,269
12.	எண்.22. விருகம்பாக்கம்	311	311	96,972	1,03,554	52	2,00,578	97,908	1,04,658	50	2,02,616
13.	எண்.23. சைதாப்பேட்டை	282	282	98,535	1,05,549	62	2,04,146	98,957	1,06,156	63	2,05,176
14.	எண்.24. தியாகராயநகர்	251	251	76,513	82,210	34	1,58,757	77,171	83,041	35	1,60,247
15.	எண்.25. மயிலாப்பூர்	272	270	95,275	1,04,166	24	1,99,465	95,989	1,05,062	27	2,01,078
16.	எண்.26. வேளச்சேரி	314	314	1,04,904	1,12,220	47	2,17,171	1,05,879	1,13,426	47	2,19,352
	மொத்தம்	**4,079**	**4,071**	**13,95,716**	**14,96,921**	**868**	**28,93,505**	**14,04,968**	**15,09,040**	**900**	**29,14,908**

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி